சுவைப் பிரியர்களே!
சுவைமிக்க காலை உணவு
அப்பம், பிட்டு, இடியப்பம்,
சுவைத்து மகிழ்ந்திட
நாடுங்கள்:
தேனமுதம்
452, கேணல் கிட்டுசாலை
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-540)

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மதிய உணவு வகைகள்
இறைச்சி, மீன், மரக்கறி
சோறு - பிரியாணி
மாலையில் றொட்டி,
கொத்துறொட்டி
உங்கள் பசியைப் பூர்த்தி
செய்கிறோம்.
தேனமுதம்
452 கேணல் கிட்டுசாலை,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 27 சனிக்கிழமை (11 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 104

# 6 பிரதி அமைச்சர்கள் உட்பட 23 எம்.பிக்கள்

# எரிபொருள் தடையை நீக்கக் கோரி மகஜர்

## ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிப்பு

கொழும்பு, மார்ச் 11

வடபகுதி மீதான எரிபொருள் தடையை நீக்குமாறு கோரி ஆறு பிரதி அமைச்சர்கள் உட்பட 23 அரச தரப்பு எம். பிக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளனர். கடந்த வியாழக்கிழமை இந்த மகஜர் கையளிக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரத்தினபுரி மாவட்ட எம். பியும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினருமான வாசுதேவ நாணயக்காரா தலைமையிலான இந்த 23 எம்.பிக்களும், எரிபொருள் தடை காரணமாக வடபகுதி மக்களின் அன்றாட வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக மகஜரில் தெரிவித்துள்ளனர்.

வடபகுதி மீதான எரிபொருள் தடை விடுதலைப் புலிகளுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. எரிபொருள் தடையை நீக்குவது மூலம் அப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கையை வழமை நிலைக்குக் கொண்டு வர முடியும் என்று மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தடையை நீக்குவது மூலம் யாழ்ப்பாணத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ ஐ 6-7)

## அகதிகள் எடுத்து வந்த ஸ்கூட்டர், சேலைகள்

### சுங்கப் பகுதியால் பறிமுதல்

கொழும்பு, மார்ச் 11

தமிழகத்தில் இருந்து கடந்த புதனன்று திருமலைக்கு வந்து சேர்ந்த அகதிகள் சிலர் சட்டவிரோதமான முறையில் எடுத்துவந்த சுமார் 60 லட்சம் ரூபா பெறுமதியான சேலைகள், சாரம் என்பனவற்றையும், ஸ்கூட்டர்களையும் சுங்கப்பகுதியினர் பறிமுதல் செய்துள்ளனர்.

அகதிகள் மூலமாக அந்தப் பொருள்களை இங்கே கடத்திவர சில வர்த்தகர்கள் முயற்சி எடுத்திருந்தது தெரிய வந்துள்ளதாக சிங்கள தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-6)

## தொண்டர் அமைப்புகளின் 22 பிரதிநிதிகள் வருகை

வடமராட்சி, மார்ச் 11

அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 22 பிரதிநிதிகள் கொழும்பில் இருந்து இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர். சி. டான்ஸர் கப்பல் மூலம் இவர்கள் அனைவரும் இன்று காலை பருத்தித்துறையை வந்தடைவர்.

தாம் சார்ந்த நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் நாளை மறுதினம் திங்களன்று இவர்கள் இங்கிருந்து திரும்பிச்செல்வர்

22 அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பெயர்கள் வருமாறு:-

★ திரு. ஏ. எல். எம். செனிவிரத்தின (லீட்ஸ்)
★ திரு. ஜேக்கப்போர்ஸ்மா (சோ றிபூஜி கெயர்)
★ திரு. ராஜா டி சில்வா (வை. எம். சி. ஏ.)
★ திரு. கே. பி. ஏ. விஜேகோன் (வை. எம் சி. ஏ)
★ திரு. எஸ். சுகுணதாஸ (வை. எம் சி ஏ)
★ திரு டேவிட் கிறாஸ் தோப்பலஸ் (வை. எம். சி ஏ)
★ திரு. ரண்டி ராஜரட்ணம் (வை. எம். சி ஏ.)
★ திருமதி ஆர். பாலசிங்கம் (வை. எம். சி. ஏ.)
★ திரு ஆய்பின்ட் பக்லநெட் (றெட்பானா)
★ திரு ஹெரில் நிங்சன் [றெட்பானா]
★ திரு பிராங் கொயில்டயற் [எம். எஸ். எப்.]
★ செல்வி மொனிக்டக்ஸ் [எம.எஸ்.எப்.]
★ திரு. சி. குணநாயகம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சமாதான முயற்சிகள் பற்றி அறிய நோர்வே குழு கொழும்பு வருகிறது

கொழும்பு, மார்ச் 11

நோர்வே அரசாங்கத்தின் உயர் நிலைக்குழு ஒன்று அடுத்த வாரம் கொழும்பு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் நடப்பு அரசியல் நிலைவரம் பற்றி மதிப்பீடு செய்யவும்— தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானப் பேச்சு, அமுலில் உள்ள மோதல் தவிர்ப்பு நிலை தொடர்பாக இலங்கை அரசுடன் அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதுமே நோர்வே அரசு உயர்நிலைக் குழுவின் நோக்கம் என்று நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சின் ராஜாங்க செயலாளர் அஸ்ஜோான் மாத்திஸன் தெரிவித்தார்.

யுத்தத்தினால் சீரழிந்துள்ள பகுதிகளை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு மேலதிக நிதியை ஒதுக்கும் சாத்தியம், மற்றும் ஏற்கனவே அமுல் செய்யப்பட்டு வரும் நோர்வேயின் உதவியுடனான அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் ஆகிய விஷயங்கள் இலங்கை அரசுடனான பேச்சுகளின்போது பரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நோர்வே அரசுக் குழுவின் விஜயத்துக்கும் இலங்கை பிரச்சினைக்கும் தொடர்பு உண்டா என்று கேட்டதற்கு - சமாதானத்தைக் காணும் முயற்சியில் இலங்கை மக்கள் காட்டும் ஆர்வம் குறித்து நோர்வே அரசு தன் நல்லெண்ண ஆதரவை வெளியிடுவதும் இவ்விஜயத்தின் நோக்கம் என்று அவர் ஒப்புக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் நிறுவனங்களை நோர்வே குழு சந்திக்கும்

கொழும்பு,மார்ச்.11

அடுத்த வாரம் கொழும்பு வரும் 3உறுப்பினர்களைக் கொண்ட நோர்வே அரசு உயர் நிலைக் குழு—

கொழும்பை தளமாகக் கொண்டியங்கும் நோர்வே நாட்டு தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஐ. நா. அபிவிருத்தித் திட்டப்பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேச விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே அரசுப் பிரதிநிதி திரு. மாத்தீஸன் இதனைத் தெரிவித்தார்.

இதே வேளை – இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்படும் பட்சத்தில் இலங்கையின் முக்கிய அரசியல் திட்டங்களை நிறைவேற்ற பல லட்சக்கணக்கான நோர்வே குறோணர்களை நோர்வே அரசு ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே அரசுக்குழு. மட்டக்களப்புக்கும் விஜயம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணா விரதத்தின் 10 ஆவது நாள் நேற்று!

## ஒருவரின் உடல்நிலை மோசம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யுத்தக்கைதிகளின் உண்ணாவிரதம் நேற்று பத்தாவது நாளாகத் தொடர்கிறது.

உண்ணாவிரதிகள் வயிற்றோட்டம், வயிறு எரிவு, வாந்தி, தலைச்சுற்று போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

சுனில் என்ற யுத்தக் கைதியின் உடல்நிலை மோசமடைந்திருந்தது. அவர் எழுந்து இருக்க முடியாத அளவு உடல்நிலை பலவீனமடைந்து படுத்த படுக்கையிலேயே இருந்தார்.

அநேகமாக எல்லா உண்ணா விரதிகளுமே உடல் பலவீனமடைந்து எழுந்து இருக்கமுடியாத நிலையில் காணப்பட்டனர். [இ-3-7]

## யாழ். ஆயர் கைதிகளை நேற்றுப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்.,மார்ச் 11

உண்ணாவிரதம் இருந்துவரும் யுத்தக்கைதிகளை யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் நேற்று சென்று பார்வையிட்டார்—

அவர் அங்கு யுத்தக் கைதிகளின் உடல் நிலையைக் கேட்டறிந்தார்.

அதேசமயம் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவின் மருத்துவர் குழு ஒன்றும் நேற்று கைதிகளைப்பார்வையிட்டது.

கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளவர்களையும் பெரிதும் உடல் நலிவுற்றிருப்பவர்களையும் அவர்கள் பரிசோதித்தனர். (இ-7)

## பனை அபி. சபைத் தலைவர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், மார்ச். 11

பனை அபிவிருத்திச் சபைத தலைவர் திரு. எஸ். பாக்கியநாதன் இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்

''நரோமா'' கப்பல் மூலமாக இவர் இன்று காலை யாழ்ப்பாணம் வருவார் என்று பனை அபிவிருத்திச் சபையின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடக்கும் மாவட்ட பனை அபிவிருத்தி இணைப்புக் குழுவின் ஆரம்பக் கூட்டத்தில் அவர் கலந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கிகள் 1 மணிவரை திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ் மாவட்டத்தில் உள்ள வங்கிகளின் கருமபீடங்கள் வாடிக்கையாளர்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை கவனிப்பதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இயங்கும் என்று யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

தற்போது வாடிக்கையாளர்களின் கொடுக்கல் வாங்கல்களுக்காக வங்கி கருமபீடங்கள் நண்பகல் 12 மணி வரை மட்டுமே இயங்கி வருகின்றன. (இ-ஐ)

## புலிகள் 'பங்கர்' அமைக்கிறார்களா? கிழக்குக்கு நேரில் சென்று பாருங்கள்

### நாடாளுமன்றில் அமைச்சர் அனுருத்த தெரிவிப்பு

கிழக்கில் விடுதலைப் புலிகள் பதுங்கு குழிகளை அமைக்கின்றார்கள் என்று தொடர்ந்து கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்னாவும் மற்றையோரும் அங்கு சென்று உண்மை நிலைமையை அறிந்து வருவதற்கு நான் பூரண பாதுகாப்பு வழங்குவேன்.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

''அண்மையில் நான் 16 செய்தியாளர்களை அழைத்துக்கொண்டு கிழக்கு மாகாணத்துக்குச் சென்றேன். என்னுடன் வந்த செய்தியாளர்களுக்கு அங்கு எவரையும் சந்தித்து செய்திகளை அனுப்பும் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது கிழக்கில் விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகளை அமைத்து வருகின்றார்கள் என்று கூறுவது தவறு.

இவ்வாறு அமைச்சர் அனுருத்த மேலும் தெரிவித்தார். (ஐ-எ)

### முச்சந்தி முரளி



எத்தனை குழுக்கள் வந்தாலும் அரசின் போக்கு மாற வேண்டுமே டாருக்க...

# ஜே. வி. பி. ஆயுதம் தூக்கும் வரை அரசு பார்த்துக் கொண்டிராது!

## உடன் பதில் நடவடிக்கை என்கிறார் அனுருத்த

ஜே வி.பியினர் மீண்டும் ஆயுதம் தூக்கும் வரை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பார்த்துக் கொண்டிராது. பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவசர காலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னைய அரசு, ஜே.வி.பியினர் ஆயுதங்களைப் பயன்படுத்த ஆரம்பித்த பின்னர்தான் நடவடிக்கை எடுத்தது. நாம் அப்படிச் செய்யமாட்டோம். ஜே. வி. பியினரின் நடவடிக்கைகள் பற்றிய புலனாய்வு அறிக்கைகள் எம்மை வழி நடத்தும்.

ஜே.வி. பியினர் ஆயுதம் தூக்கும் வரை நாம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம். உடனடிப் பதில் நடவடிக்கையை அரசு எடுக்கும்.

ஜே வி. பியினர் ஜனநாயக வழியில் செல்வார்களேயானால் ஒன்றுமே நடக்காது.

எனினும், அவர்கள் ஆயுதங்களை மீண்டும் தூக்கக்கூடும் என்ற சந்தேகம் எழும்பியுள்ளது அதனால் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [ஐ-எ]

### தேசிய பாதுகாப்புடன் முக்கிய தொடர்புடைய

# இராணுவ புலனாய்வுப் பிரிவின் நிர்வாக அமைப்பு மறுசீரமைப்பு

## இயக்குநராக புதிய அதிகாரி நியமனம்

கொழும்பு, மார்ச் 11

இராணுவ புலனாய்வுப் பிரிவின் நிர்வாக அமைப்பு முற்றாக மறுசீரமைக்கப்படவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன் ஆரம்ப கட்டமாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு இயக்குநராக புதிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தேசியப் பாதுகாப்புடன் மிக முக்கிய தொடர்புடைய இப்பிரிவின் நிலைமை தினசரி சீர்கெட்டுச் சென்றமையினாலேயே மறுசீரமைப்பு நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

தகவல் சேகரிக்கும் பிரிவின் செயல்திறன் அற்ற தன்மையே ஜனகபுர மற்றும் பூநகரி முகாம்களின் வீழ்ச்சிகளுக்குக் காரணம் என பாதுகாப்பு நிபுணர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு வயதுடைய சிவப்பு பெண் நாயும், சிவப்பு வெள்ளை நிறமுடைய பொமனேரியன் குட்டிகளும், 8 மாதம் நிரம்பிய அல்சேஷன் பெண் நாயும், கூடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவா, இல. 22, செம்மணி வீதி, நல்லூர் [கிட்டு பூங்கா அருகில்]. [35615]

மிகவும் நல்ல நிலையிலுள்ள ''சுப்பர்கப் 50'' ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி [ஐங்கரன் விளையாட்டுக்கழக வீதி], யாழ்ப்பாணம். [35612]

குட்டி ஈனும் பருவத்திலுள்ள சண்ன், யமுனாபாரி ஆடும், பால் எடுக்கும் சணன் ஆடும், இனவிருத்திச்சேற்ற குட்டிகளும் விற்பனைக்குண்டு. கனகசிங்கம், இல 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [35614]

சுத்தமான 2½ மாத பூச்சி நீக்கிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. Sellathurai நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (8379)

8 H. P. R. A. லிஸ்ரர் Water Cool என்ஜின் லிஸ்ரர் J. K. சிலின்டர் ஹெட் தொடர்பு: இந்திரன், ''யோக மாளிகை'', வல்லை வீதி, சங்கானை. (35600)

இரு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கி. இராசதுரை, எச்சாட்டி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (35595)

### காணி விற்பனைக்கு

கைதடி நுணாவில் அறவழி அலுவலகத்திற்கு அருகில் கண்டி வீதியில் — தென்னை, பனை, கிணறு அடங்கிய 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி அ. ஞானசம்பந்தர், சிவன் கிளினிக், சிவன் கோயிலடி, சாவகச்சேரி. [சி-743]

### விற்பனையாகின்றது

விற்பனையாகின்றது புதிய வெளியீடுகள் புதிய பாடத் திட்டத்திற்கானது நாமும் சுற்றாடலும் ஆண்டு – 2 தமிழ்மொழி ஆண்டு 1 – 2 (செயல் நூல்) தமிழ் மொழி மொழித் தேர்ச்சியும், இலக்கணமும் ஆண்டு 9, 10, 11 G. C. E. (O/L) தமிழ்மொழி அடிப்படை அறிவும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8373]

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத்திட்டத்திற்கானது. புதிய விஞ்ஞானம் பாடம் பொழிப்பும், தொழிற்பாடுப் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8374]

### தேவை

க பொ. த. [உ/த] விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவுகளுக்கு உரிய பாட நூல்கள், துணை நூல்கள் ஆகியனவற்றின் ஆசிரியர்கள் பிரசுரிப்போர் தமது நூல்களை விற்பனைக்காக எமது புத்தக நிலையத்துக்கு நேரடியாகத் தந்துதவுமாறு வேண்டுகின்றோம். யாழ்ப்பாண புத்தக நிலையம், 448, கிட்டுசாலை (வைத்திய சாலை முன்), யாழ்ப்பாணம். (சி-616)

தன்இயக்கக் கதிரை வண்டில் Wheel Chair உடனே தேவைப்படுகிறது. ஆ. ந. நம்பி No; 62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (சி-5783)

### விவாக சேவை

கொழும்பில் நடைபெறும் விவாக சேவையில் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு U. K. அவுஸ்திரேலியா, நோர்வே, நியூசிலாந்து. கனடா போன்ற நாடுகளுக்கு ஸ்பொன்சர் செய்து அழைக்கப்படும். தேவைப்படுவோர் இன்றும், நாளையும் நேரில் வந்து சந்திக்கவும். மாவை விநாயகர் ஜோதிட நிலையம், இல. 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. [35616]

### தவறிவிட்டது

இராமலிங்கம் தேவராஜன் ஆகிய எனது 703433928 V இலக்க அடையாள அட்டை 20-2-95இல் யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். இ. தேவராஜன், இல. 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [35609]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Christombu Golden Comet சிவப்பு 2 கிழமை பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. Prima, Christombu வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [35589]

### விலை மாற்றம்

அலுவலக முகாமைக்கு ஓர் வழிகாட்டி தேவராஜன், ஜெயராமன் விலை ரூபா 40-00 ஸ்ரீ லங்கா புத்தக சாலை அன் அச்சகம், 234, K. K. S. Road, Jaffna. [சி-613]

### இலகு திருமண சேவை

34, விசாகம் 3ஆம் பாதம்' செவ்வாய் தோஷமற்ற பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு ஏற்ற பட்டதாரி மணமகன் வேண்டப்படுகிறார். மணமக்களே நேரடியாக நாடுங்கள் இலகு திருமண சேவையை. ஞாயிறு தோறும் விமலா, நாச்சிமார் கோயிலடி. (35597)

### மணப்பெண் தேவை

வயது 29, சுவாதி, 2இல் செவ்வாய், அவுஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்று, சொந்த Restaurant உரிமையாளர், தற்பொழுது யாழ். வந்துள்ளவருக்கு A/L படித்த அழகிய மணப்பெண்ணைத் தேடுகின்றனர். ஸ்பொன்சர் செய்து அழைக்கலாம். முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். M. Rajenthieram, Retd. Accountant இல; 165, கோப்பாய் தெற்கு, (நாவலர் பாடசாலை அருகில்) கோப்பாய் (35613)

### LITERATURE

Answers for past Question Paper 92, 93, 94, English Literature, Poems, Answer to Question on Poems. Poetry WorkBooks,Prose andDrama. Oliver Twist Madol Doova by A. K. Hewage. Available at Poobalasingham, Book Depot, Jaffna (C-601)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகையுண்டு நல்லூர் வீடியோ சென்ரர். [35588]

### வீனஸ் அன்ரனா

கார் பற்றறி மூலம் 12'' கறுப்பு – வெள்ளை ரி. வியில் ரூபவாஹினி – மெட்ராஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி வசதி செய்துதரப்படும். (கார் பற்றறி, 12'' கறுப்பு – வெள்ளை ரி. வி. உள்ளவர்கள் தொடர்புகொள்க) வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-397)

### ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகள் தீர, நடைபெறும் திருமணம் விரைவில் நடைபெற தொழில்தடை, கல்வித் தடை தீர ஆலோசனை வழங்கப்படும். நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். அதிர்ஷ்ட சாதகம் கணிக்கப்படும். மாவை விநாயகர் ஜோதிட நிலையம், இல. 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு (35617]

### பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி க. பொ. த. [சா/த] கடைசித் தகைமை. சனி, ஞாயிறு சமூகம் தர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக்கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். [8375]

### புத்தாண்டுப்பலன்

ஜோஸ்யரின் பங்குனிமாத சிறப்பிதழ் புத்தாண்டுப்பலன்களுடன் கல்வியியல் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. பன்னிருராசிகளுக்கான பலன், கல்வி யாருக்கு அமையும். உயர்கல்வி யோகம் இன்னும் பல அரிய சோதிட தகவல்கள். விலை 6/- மட்டுமே. (35545)

### G A.Q. வினா-விடை

ஜெயகாந்தனின்(G. A. Q. வினா-விடை அரசியல்) அரசறிவியல் நிறுவனங்கள் Ex. Ps 1 2 விற்பனையாகின்றது. யாழ். நகரின் பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (35509

## இ. துரையப்பா அன்சன்ஸ்
### தொல்புரம் – சுழிபுரம்

இ. துரையப்பா அன்சன்ஸ் தாபனத்திலும் அதன் பங்காளரிடமும் பணம் வைப்புச் செய்தோரும், நகை அடைவு வைத்து, அங்கு 1985 லும் 1987 லும் நடைபெற்ற களவினால் அவற்றை திருப்பிப் பெறாதவர்களும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.

1. பணம் வைப்புச் செய்தவர் அல்லது அடைவு வைத்தவர் பெயர், முகவரி.
2. தற்போது விண்ணப்பிப்பவர் வைப்புச் செய்தவர் அல்லாதவராயின் வைப்புச் செய்தவரின் வாரிசு என்பதற்கான விளக்கமும் அத்தாட்சியும்.
3. வைப்புச் செய்த அல்லது அடைவு வைத்த திகதியும், தொகையும்.
4. இதுவரை மீளப்பெற்ற தொகைகளும் பெற்ற திகதிகளும்
5. தற்போது வரவேண்டியுள்ள தொகையும், அத்தொகையும் எவ்வாறு கணிக்கப்பட்டது என்பதற்கான விளக்கமும்.

மேற்குறிப்பிட்ட விவரங்களைச் சேர்ப்பிக்க வேண்டிய முகவரி;-

எஸ். செல்வேந்திரா அன் கோ
பட்டயக்கணக்காளர்,
இல. 182 1/5 அர்ச்சுனா வீதி (ஸ்டான்லி வீதி)
யாழ்ப்பாணம்

இங்ஙனம்;
[35610] து இராசரட்ணம், து நடராசா.

## கணக்காளர் தேவை

கேணல் கிட்டு சாலையில் அமைந்திருக்கும் பல சரக்கு வியாபார ஸ்தாபனத்திற்கு ஐந்தொகை கணக்கு செய்யக்கூடியவரும் மூன்று வருட அனுபவம் வாய்ந்தவருமான ஆண் கணக்காளர் ஒருவர் நிரந்தரமாகத் தேவை. அனுபவம் வாய்ந்தவர்கள் தங்கள் தகைமைகளை குறிப்பிட்டு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

இல. 968, மே. பா உதயன்.
(8380)

அருட்கலாநிதி
## டொனால்ட் கனகரட்னம்
[கர்த்தருக்குள் நித்திரையடைந்த யாழ். ஆர்ச் டீக்கன்]
அவர்களின்

வாழ்வுக்கும் சாட்சிக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை.

காலம்: இன்று (11-03-95) சனிக்கிழமை
நேரம்: மாலை 4 மணிக்கு
இடம்: சுண்டுக்குளி பரி யோவான் ஆலயம்.

அருட்பிதாக்கள், இறைமக்கள், அன்பர்கள் யாவரும் அழைக்கப்படுகின்றனர்.

செயலாளர்
(சி. 741) J. C. M. A.

உ
இணுவில்
அருள்மிகு சிவகாமி அம்மன் கோயில்
சித்திர
## திருமஞ்ச வெள்ளோட்ட விழா
## விஞ்ஞாபனம்

நிகழும் பவ வருடம் மாசி மாதம் 27 ஆம் நாள் 11 – 03 – 1995 (இன்று) சனிக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 5 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெற திருவருள் பாலித்துள்ளது.

### நிகழ்ச்சி நிரல்

மாலை 3–00 மணி

★ ஆசியுரை
சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்
சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள்
சிவஸ்ரீ சாம்பசிவசோமசபேசக் குருக்கள்
(பிரதமகுரு, இணுவில் சிவகாமி அம்மன் கோயில்)

★ சிறப்புரை
ஆறு. திருமுருகன் B. A.
இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்)
மா. வேதநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

★ வெள்ளோட்ட விழாவுரை
கனகசபாபதி நாகேஸ்வரன் (M. A.)

★ வாழ்த்துரை
செ. சத்தியமூர்த்தி (B. A.)
க. தேவராஜா (தலைவர் வணிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (அதிபர்)
இ. திருநாவுக்கரசு (பண்டிதர்)
பெ. கனகசபாபதி (ஜே. பி.)
நா. சச்சிதானந்தன் (பல்கலைப் புரவலர்)
சா. வே. பஞ்சாட்சரம் (பண்டிதர்)

★ கலைஞனைக் கௌரவித்தல்

★ பதிலுரை
ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி அவர்கள்

அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்பிகையின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

– திருமஞ்சத் திருப்பணிச் சபை,
சிவகாமி அம்மன் கோயில்.
இணுவில்.

விளம்பர அன்பளிப்பு:
✶ ராஜன் அழகு மாடம் ✶
யாழ்ப்பாணம்.
[35608]

இராசகிராமம்
சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா
அபிவிருத்தி நிதிக்கான
## மாபெரும் கலை விழா

இடம்: நெல்லியடி
மத்திய மகா வித்தியாலயம்
காலம்: 16 – 03 – 1995 இரவு 7 மணிக்கு

### நிகழ்ச்சிகள்

அருணா, சாந்தன், ராஜன் இசைக் குழுவினர்
இணைந்து வழங்கும்
"இன்னிசை கான மழை"
கோப்பாய் சுதேச கலாமன்றம்
வழங்கும்
"அவள் ஒரு மாதிரி"
"ஆவினில் இனியவள்"
(நாடகங்கள்)
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சரியான பாதையில் இளம் சமூகத்தை வளர்த்துச் செல்லும் பணி இன்றைய சமூகத்தின் கைகளிலே உண்டு.

அபிவிருத்திக் குழு,
இராசகிராமம்.
[35586]

## வேலை வாய்ப்பு
### (மருந்தாளர்)

யாழ். நகரை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள மருந்தகத்திற்கு மருந்தாளர் / ஆரம்ப பயிற்சி மருந்தாளர் / மருந்து விற்பனையில் அனுபவமுள்ளவர் தேவை.

கல்வித்தகைமை, அனுபவம் மற்றும் முழுவிவரங்களுடன் உடன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

இல. 767, C/o உதயன்
(35619) யாழ்ப்பாணம்.

கோண்டாவில் கிழக்கு
நாகபூஷணி அம்பாள் ஆலய
## வருடாந்த மஹோற்சவம்

### 4ஆம் திருவிழா இன்று சனிக்கிழமை

✶ விசேட நிகழ்ச்சிகள் ✶

நாதஸ்வரக் கச்சேரிகள்
பத்மநாதன் குழுவினர்
பஞ்சாபிகேசன், நாகேந்திரன் குழுவினர்
தவில் கச்சேரி
உதயசங்கர், நித்தியானந்தம்
வில்லிசை
சின்னமணி குழுவினர்
ஒளி அமைப்பு — மனோ லைற்

அம்பாள் அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

– 4ஆம் திருவிழா உபயகாரர்கள்.
[35618]

## இணுவில் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டு

1995-03-12 ஆம் திகதி நடைபெறஇருந்த மேற்படி நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் 1995 – 04 – 16 ஆம் திகதி நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

(35620) நிர்வாகக் குழு

## பயிற்சி வாய்ப்புகள்

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படவுள்ள பின்வரும் பயிற்சிகளில் பங்குகொள்ள விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

✶ தட்டச்சு யந்திரம் திருத்தம் [3 மாதம்]
[பகல் நேரம்]

✶ நீரிறைக்கும் யந்திரம் திருத்தம் [4 மாதம்]
[பகல்/மாலை நேரப் பயிற்சி]

பயிற்சிகள் யாவும் அனுபவமும்' திறமையுமிக்க விரிவுரையாளர்களால் அறவழி பயிலகத்தில் நடத்தப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 20 – 03 – 95**

சுய விவரமடங்கிய விண்ணப்பங்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

NVDAG
செயலாளர்,
அறவழிப் போராட்ட குழு,
த.பெ. இல.2,
சாவகச்சேரி.
[35628]

## 45-ம் நாள் நினைவஞ்சலி

### சேதுபதி சோமசுந்தரேசன்
(அல்லைப்பிட்டி)
(இளைப்பாறிய ஆசிரியர் P.T.I.)

25-02-95 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் 45 ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று (11-03-95) அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இன்று அன்னாரது சகோதரரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
சகோதரன்.

1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (35626)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 06 — 04 — 1933



மறைவு: 09 — 02 — 1995

### ஐயாத்துரை குமாரதாசன்
திதி: 11-03-1995

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மேற்படி இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்;
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை மத்தி,
ஏழாலை. (8277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

202/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்


## நம்பிக்கை மீது மண்

கொழும்புக்கும் ஓமந்தைக்கும் இடையில் பயணம் செய்வோரையும் அவர்கள் கொண்டுவரும் பொதிகள், பொருள்களையும் சோதனை செய்வதற்கென, புதிதாக, மூன்றாவது இராணுவத் தடை முகாம் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது!

தமிழ்ப் பயணிகளைத் தொல்லைப்படுத்துவதற்கு ஏற்கனவே உள்ள ஈரப்பெரிய குளம், தாண்டிக்குளம் தடைமுகாம்கள் போதா என்று கருதி, புளியங்குளத்தில் மூன்றாவது தடைமுகாமை இராணுவத்தினர் நிறுவியிருக்கிறார்கள்.

வடக்கே வரும் லொறிகளைச் சோதனையிடுவதைத் துரிதப்படுத்தவே புதிய தடைமுகாம் திறக்கப்படுவதாகக் கூறப்படுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. தாண்டிக்குளத்திலேயே ஆளணியினரை அதிகரித்து சோதனையைத் துரிதப்படுத்தலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் போக்குவரத்துச் சுதந்திரத்தை — மனித வாழ்வுக்குத் தேவையான அடிப்படை உரிமையை — பறித்தது. தமிழர்கள் மீது விதித்த போக்குவரத்து, பொருளாதாரத் தடைகளை நீக்கி அவர்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவரப் போவதாக, பதவிக்கு வந்த புதிதில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு கூறியது.

ஆனால் ஆறு மாதங்களில் அவை அண்டப் புளுகுகளாகவே இருப்பதை நடைமுறையில் காணமுடிகிறது. பொருளாதாரத் தடையும் முற்றாக நீங்கியதாக இல்லை; போக்குவரத்துப் பாதையையும் திறந்ததாக இல்லை.

இத்தகைய ஒரு பின்னடைவான நிலையிலேயே, சமாதானப் பேச்சு தோற்குமானால் மீண்டும் போர் நடத்தத் தயாராகுமாறு பாதுகாப்புப் பிரதி அமைச்சர் படையினரை உசார்ப்படுத்தினார். அந்த உசாராக்கலின் ஓர் அங்கமே வடக்கிலும் கிழக்கிலும் புதிது புதிதாக இராணுவத் தடைமுகாம்களைத் திறந்துவரும் செயற்பாடு.

சாமாதானத்தை அடைவதில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதில், அரசாங்கம் விசுவாசமாக இருந்தால், நேர்மையாகச் செயற்பட்டால் அது 'இல்லாவிடில் இது' என்ற பேச்சுக்கே இடமிருக்காது! தனது நோக்கத்தில் அரசு உறுதியாக இருக்குமானால் மனத்தளம்பல் தோன்ற வாய்ப்பும் இல்லை.

இராணுவச் சோதனை முகாம்கள் இராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்தும் சின்னங்கள். மக்களது சுதந்திரமான போக்குவரத்துக்குக் குந்தகம் விளைவிப்பவை. பிரயாணிகளுக்கு வேண்டாத தொல்லைகளையும், தொந்தரவுகளையும் கொடுத்து இம்சைப்படுத்தும் நிலையங்கள்.

தமிழ் மக்களின் கஷ்டங்களைக் குறைத்து, அவர்களின் அவலங்களை நீக்குவதில் ஆர்வம் உள்ளதாகக் கூறும் அரசு, அவர்களுக்கு மேலும் மேலும் சிரமங்களையும், தொல்லைகளையும் கொடுக்க முனைவது புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகும். அதன் உண்மையான நிலையைச் சந்தேகத்துக்கு உரியதாக்குவதாகும்.

வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை அப்புறப்படுத்தித் தமது சொந்தக் கிராமங்களில் வாழக் கூடிய நிலை ஒன்றை அரசு உருவாக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அந்த எதிர்பார்ப்பில் அல்லது நம்பிக்கையில் மண் அள்ளிப் போடுவது போல, இராணுவ முகாம்களைப் பலப்படுத்துவதிலும், இராணுவத் தடை முகாம்களை திறப்பதிலும் அரசு தீவிரமாகச் செயற்படுகிறது!

வெறும் பிரசாரத்தால் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கிவிட முடியாது; அவர்களின் கஷ்டங்களை, அவலங்களை நீக்கிவிட முடியாது; தமிழர் பிரச்சினையை தீர்க்கவும் இயலாது. இதனை சந்திரிகா அரசு உணர்வது எப்போது?

# திருமலை தமிழர் காணாமற்போனது குறித்து இன்று விசாரணை ஆரம்பம்

### நீதியரசர் பாலகிட்ணர் தலைமையில் முதலாவது அமர்வு கூடுகிறது

கொழும்பு மார்ச் 11

1990 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி — ''ஈழப் போர்-2'' ஆரம்பமான தினத்தன்று — திருகோணமலையில் படையினர் நடத்திய சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு பின்னர் காணமற்போன 26 தமிழர்கள் குறித்து விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முதலில் விசாரணை நடத்தும்.

வடக்கு—கிழக்கில் காணாமற் போனோர் குறித்து விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு இன்று முதல் தடவையாகக் கூடும்போது, மேற்படி 26பேர் சம்பந்தமான விசாரணை ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகின்றது.

ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு இன்று காலை திருகோணமலை டொக்யார்ட் வீதியில் உள்ள சமூக சேவை மன்றத்தில் இடம்பெறும்.

நீதியரசர் கே. பாலகிட்ணர் — தலைமையிலான இந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக எவி டபிள்யூ. வைத்தியரத்ன, டாக்டர் டபிள்யூ என். வில்சன் ஆகியோர் பணிபுரிவர்.

முன்னாள் யாழ். அரச அதிபர் திரு. எஸ். எவி மாணிக்கவாசகர் ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றுவார்.

காணாமற் போனோர் குறித்து இது வரை 12ஆயிரம் முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன. அவற்றில் சுமார் ஆயிரம் முறைப்பாடுகள் திருமலை மாவட்டத்திலிருந்து செய்யப்பட்டவையாகும்.

இவற்றில் பெரும்பாலானவை ''ஈழப்போர்-2''ஆரம்பமான பின்னர் காணாமற் போனவர்கள் பற்றியதாகும்.

''ஈழப் போர் - 2 ''ஆரம்பமான தினத்தன்று திருமலை நகரில் படையினர் நடத்திய சுற்றிவளைப்பு, தேடுதல் ஆகியவற்றின்போது காணாமற் போனோர் குறித்து ஆணைக்குழு முதலில் விசாரணை நடத்தும் என்று குழுவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி காணாமற் போனோர் குறித்து செய்யப்பட்ட முறைப்பாடுகளில்—

சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டோர் முதலில் திருகோணமலை நகரின் மத்தியில் உள்ள ''மக்கெய்ஸர் ஸ்ரேடியத்துக்கு'' கூட்டிச் செல்லப்பட்டதாகவும் —

அங்கிருந்து ''பிளாண்டன் பொயின்ற்'' இராணுவ முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டோர் பின்னர் காணாமல் போனதாகவும் —

இந்தச் சுற்றிவளைப்பின் பின்னர் 26 பேர் காணாமற் போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 26 பேரினதும் உறவினர்கள் இன்று ஆரம்பமாகும் ஆணைக்குழு விசாரணைகளின் போது சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவதினம் திருகோணமலை நகரில் மேற்படி இராணுவ நடவடிக்கையை வழிநடத்தியதற்குப் பொறுப்பாகவிருந்த படை அதிகாரிகளையும் விசாரணைக்கு ஆணைக்குழு அமைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ)

### பண்டத்தரிப்பு, சில்லாலையில்

## இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் தொடரும் திருட்டு

சண்டிலிப்பாய், மார்ச் 11

பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பகுதிகளில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளிலுள்ள பொருள்களும், சட்டடப் பொருள்களும் தொடர்ந்தும் திருடப்பட்டு வருவதாக பலத்த புகார் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலையங்களின் கட்டட கதவுகளும், கூரை சிற்றுகளும் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் கூரை, ஓடுகள் கடந்த இரு வாரங்களாக பகுதி பகுதியாக - கட்டம் கட்டமாக இரவு வேளைகளில் அப்புறப்படுத்தப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. கல்லூரி வளவில் நீண்ட காலமாக நின்ற வேம்பு, பலா போன்ற மரங்கள் உட்பட சகியால்களும் விறகுக்காக கண்டபடி தறிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

பண்டத்தரிப்புக்கும் மாதகலுக்கும் இடைப்பட்ட வயல் வெளிகளில் உள்ள கிணற்றடிகளின் ஆடுகால் மரங்களையும் ஏனைய மரங்களையும் சிலர் கண்டபடி தறித்துக் கொண்டு போவதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அவர்கள் கிணற்று துலாக்களைக் கூட தறித்து எடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-135]

### தொலைக்கல்வி ஆசிரியர்கள்

## குறுகிய காலப் படிப்பு லீவு வழங்குமாறு கோரிக்கை

அச்சுவேலி, மார்ச் 11

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறிப் பரீட்சைக்கு தயார் செய்வதற்கு குறுகிய காலப்படிப்பு லீவு வழங்குமாறு பயிற்சி ஆசிரியர்கள் கோரியுள்ளனர்.

முழுமையான பாடசாலைக் கடமைப் பொறுப்புக்களுடனும் இணைப் பாடவிதான வேலைப் பொறுப்புக்களுடனும் பயிற்சி நெறியைத் தொடர வேண்டி இருப்பதால், பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தயார் செய்ய முடியாமல் இருக்கிறது. இதனால் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கு வசதியாக குறுகிய காலப்படிப்பு லீவு வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இது சம்பந்தமாக கல்வி வலயம் ஒன்று, இரண்டு கல்விப் பணிப்பாளர்களுக்கும், ஆசிரியர் சங்கங்களுக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-11)

### விஞ்ஞானிகளே ஆச்சரியப்படுமாறு

## வியாழன் பற்றி வெளியான பல புதிய தகவல்கள்

கொழும்பு, மார்ச் 11

கடந்த வருடம் வியாழன் கிரகத்துடன் மோதிய ஷூமேக்கர் - லெவி 9 என்ற வால்வெள்ளியில் இருந்து சிதறிய ஒவ்வொரு துண்டும் — வாயுவை 2 ஆயிரம் கிலோ மீற்றர் தொடக்கம் 3 ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்திற்கு தெறிக்கச் செய்துள்ளது

வால்வெள்ளியின் சிறிய துண்டுகள் விழுந்தபோது, இவ்வளவு உயரத்திற்கு வாயு தெறித்தது தமக்கு அதிர்ச்சியை அளித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் வெளிவந்த ''சயன்ஸ்'' என்ற விஞ்ஞானச் சஞ்சிகையிலேயே விஞ்ஞானிகள் இவ்வாறு எழுதியுள்ளனர்.

வியாழன் - வால்வெள்ளி மோதலின்போது வெளிவரக் கூடிய வாயு வெள்ளை நிறமாக இருக்கும் என்ற விஞ்ஞானிகளின் எதிர்பார்ப்பிற்கும் மாறாக. கறுப்பு நிற வாயுவே இம் மோதலின்போது வெளிவந்தது.

வியாழனில் உள்ள சில மூலகங்களை இனம் காண்பதற்கும் இம்மோதல் வழிவகுத்தது.

கந்தகம், மக்னீசியம், ஒட்சிசன் ஐதரசன் உட்பட பல மூலகங்களுடன் வியாழனில் நீரும் உண்டு.

''நாம் முன்பு நினைத்ததை விட பத்து மடங்கு நீர் வியாழனில் உண்டு'' என்று கூறுகின்றனர் விஞ்ஞானிகள்.

கோள்களிலேயே பெரியதான வியாழன், பூமியைப் போல் முந்நூறு மடங்கு பெரியது. [ஒ-5]

## ஐஸ் தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வட தமிழீழத்தில் பெருமளவாகப் பிடிக்கப்படும் கடல் மீனைப் பாதுகாப்பதற்கு உதவும் பனிக்கட்டிக்கு [ஐஸ்] ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு விரைவில் நீங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

பனிக்கட்டியின் தேவையைக் கருத்திற் கொண்டு மிக விரைவில் குருநகரில் உள்ள பனிக்கட்டித் தொழிற்சாலையை இயங்க வைப்பதற்குத் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

இதனைத் தொடர்ந்து பனிக்கட்டித் தேவை அதிகரிக்கும் போது இயங்காதிருக்கும் ஏனைய பனிக்கட்டித் தொழிற்சாலைகளையும்இயங்க வைக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஒ)

### விசேட ஏற்பாட்டின் பேரில்

## யாழ். மாநகரப் பகுதி வடிகால்கள் சுத்திகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ் மாநகரப் பகுதியில் உள்ள வடிகால்களை சுத்திகரிப்பதற்கு விசேட பிரிவு ஒன்றை யாழ். மாநகராட்சி மன்றம் ஆரம்பித்து வைத்துள்ளது.

இப்பிரிவு கடந்த முதலாம் திகதி தொடக்கம் செயற்படத் தொடங்கியுள்ளதாக மநாகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாநகரப் பகுதியில் உள்ள அனைத்து வடிகால்களையும் இப்பிரிவினர் சுத்திகரிப்பர் என்றும் அவ்வதிகாரி மேலும் கூறினார். [ஒ-17]

### முன்னாள் ராணுவத்தளபதிகள் மீதான குற்றச்சாட்டு:

# சொத்துக்கள், பங்காளிகள் குறித்து ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 11

முன்னாள் இராணுவத் தளபதிகளான ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, சிசில் வைத்தியரத்ன ஆகியோருக்கு எதிராக உத்தியோக பூர்வமான விசாரணைகள் ஆரம்பிக்க முன்னர் அவர்களது சொத்துக்களைக் கண்டறியும் பொறுப்பு ஒரு விசேட விசாரணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்குச் சொந்தமான வீடுகள், வங்கிக் கணக்குகள், ஏனைய வியாபாரத் தொடர்புகள் அவற்றின் பங்காளிகள், பங்காளிகள் வசமுள்ள சொத்துக்கள் ஆகியன தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவற்றைவிட இராணுவத்திற்கா மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள், பெற்ற சேவைகள், கேள்விப் பத்திரங்களை வழங்கியது ஆகியன தொடர்பாக பெருமளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதால், அவை பற்றியும் விசாரணைகள் மேற்கொள்ளப்படலாம் என ''ஹிரு'' என்னும் சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

அவர்களுடன் தொடர்புகள் வைத்திருந்த பல வர்த்தகர்களுக்கு இராஜ தந்திர அந்தஸ்துள்ள கடவுட்ச்சீட்டுகள் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர்களில் சிலர் ஆயுத விற்பனைகளில் ஈடுபட்டிருந்ததாகவும் அப் பத்திரிகை தெரிவிக்கிறது. (ஒ-10)

### இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்

# நஷ்டஈடாக 50 கோடி ரூபாவை புடைவை உற்பத்தி நிறுவனம் பெறும்!

### ஆகக்கூடிய காப்புறுதி நஷ்டஈட்டுத் தொகை இதுவே

கொழும்பு, மார்ச் 11

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின், மிக அதிகமான காப்புறுதி நஷ்ட ஈட்டுத் தொகையாக சுமார் 50 கோடி ரூபா காப்புறுதித் தொகையை ''செளத் ரெக்ஸ்ரைல்ஸ் லங்கா லிமிட்டெட்'' மிகவிரைவில் பெறவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

நாட்டின் மிகப் பெரிய துணி உற்பத்தி நிறுவனமான ''செளத் ரெக்ஸ்ரைல்ஸ் லங்கா லிமிட்டெட்'' நிறுவனம் கடந்த மாத முற்பகுதியில் ஏற்பட்ட பெரும் தீவிபத்தில் பேரிழப்பைச் சந்தித்திருந்தது.

சுமார் 2 லட்சம் சதுர அடிப் பரப்பில் அமைந்திருந்த நிறுவனத்தின் களஞ்சியசாலை மற்றும் துணி உற்பத்தி இயந்திரங்கள் ஆகியன இத் தீ விபத்தினால் எரிந்து நாசமாகின.

தொழில்சார் அமைதி நாட்டில் நிலவாவிட்டால் இந்தத் தொழிற்சாலை மீள அமைக்கப்படமாட்டாது என நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சூசமாகத் தெரிந்திருப்பதாக ''த ஐலண்ட்'' குறிப்பிட்டுள்ளது.

தீ விபத்தால் நிறுவனத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் இரண்டு கோடி அமெரிக்க டொலர் [சுமார் நூறு கோடி ரூபா] என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் நிறுவனத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் தொடர்பாக காப்புறுதிக் கூட்டுத்தாபனம் செய்துள்ள மதிப்பீடு, நிறுவனத்தின் மதிப்பீட்டை விட மிகக்குறைவானதாக இருக்கும் என காப்புறுதிக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நிறுவனம் செய்து கொண்ட காப்புறுதியை, ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத் தாபனம் ஐரோப்பா மற்றும் சிங்கப்பூரில் உள்ள காப்புறுதி நிறுவனங்களுடன் மீள் காப்புறுதி செய்திருந்ததாகவும் —

அந்த மீள் காப்புறுதி செய்த நிறுவனங்களைச் சேர்ந்த மதிப்பீட்டாளர்களின் உதவியுடன், ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபன மதிப்பீட்டாளர்கள், மேற்படி தொழிற்சாலைக்கு ஏற்பட்ட நஷ்டத்தை மதிப்பீடு செய்து வருவதாகவும் —

சம்பந்தப்பட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' தெரிவித்தது.

ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இதுவரை காலத்துக்குள் வழங்கிய அதிகூடிய காப்புறுதி நஷ்ட ஈட்டுத் தொகையை — 14 கோடி ரூபாவை — டோக்கியோ சிமெந்து நிறுவனம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. [உ]

## மரத்திலிருந்து தவறி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

கள்சீவுவதற்காக தென்னை மரத்தில் ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் மரத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்து அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

சண்டிலிப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த பண்டாரி குணசேகரம் (வயது 41) என்பவரே மரணமானவர் ஆவார்.

## விளையாட்டு அபிவிருத்திகுழு ஆரம்பக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமராட்சி வலய—விளையாட்டு அபிவிருத்திக்குழு அமைப்பதற்கான ஆரம்பக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [ஒ-14]

## பெரும்போக நெற்செய்கை: இம்முறை நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். மாவட்டத்தில் பெரும்போகம் நெல் அறுடை நிறைவு பெற்றிருப்பதாக யாழ். மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு 9ஆயிரத்து 985 ஹெக்டேர் நிலப்பரப்பில் பெரும் போக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது.

அறுவடை காலத்தில் மழை பெய்ததால் வெள்ளத் திற்கு மத்தியிலும் சில வயல்களில் நெல் அறுடைஇடம்பெற்றது.

இம்முறை பெரும்போக நெற்செய்கை நல்ல விளைச்சலை ஈட்டிக் கொடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜா கலந்து கொள்வார். (ஒ-117-31)

★ ★ ★

உரும்பிராய் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு அதிபர் திரு. சி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. அ. பொன்னம்பலம் கலந்துகொள்வார். (ஒ-14)

★ ★ ★

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு, முத்தமிழ் மன்ற மைதானத்தில் அதிபர் திரு. நா. நடேசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா கலந்து கொள்வார். (ஒ-14)

★ ★ ★

சண்டிலிப்பாய், இந்துமகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திரு. ச. சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கமும் கலந்து கொள்வார். (ஒ-14-90)

★ ★ ★

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திரு. ஏ. வீ கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சங்கானை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். (ஒ-14-90-135)

★ ★ ★

வல்வை றோ. க. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ரேவடி விளையாட்டு அரங்கில் அதிபர் திரு. க. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. இராஜேந்திரன் கலந்து கொள்வார். (ஒ-155-14)

## புலிகளின் குரல் வானொலியில்

**11 — 03 — 1995**

**சனி இரவு**

- ★ 8-01 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30—செய்திகள்
- ★ 8-40 — கவியரங்கம்— ''மண்ணில் இன்பங்களை வேண்டி மாண்பினை இழப்பாரோ''

**12— 03 — 1995**

**ஞாயிறு காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15—களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40—களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**சனி மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30 — அறிவியல் வினாடி — வினாப் போட்டி
- ★ 6-00— சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 —பாமாலை
- ★ 6-15 — என் தெரிவு

## துறைமுகத்தில் 4 கப்பல்கள்!

வடமராட்சி, மார்ச் 11

பருத்தித்துறை துறைமுகத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை ஒரே சமயத்தில் 4 கப்பல்கள் தரித்து நின்றன.

குமண, முடதா ஆகிய இரு சரக்கு கப்பல்களும், சிடான்ஸர், நரோமா ஆகிய இரு பயணிகள் கப்பல்களும் அங்கு தரித்து நின்றன [ஒ-173)

## பெண்கள் நிலைய விழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 11

வில்லியம் மேதர் ஞாபகார்த்த மருதனார்மடம் பெண்கள் நிலையத்தின் 54 ஆவது வருடாந்த விழா இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறும். (ஒ-14)

## சிற்றூழியர் வேலை நேரம் குறைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமை புரியும் சிற்றூழியர்களின் கடமை நேரம் 30 நிமிடங்களால் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மதிய உணவு நேரத்துடன் சேர்த்து எட்டரை மணித்தியாலங்கள் கடமைநேரமாக இருந்து வந்தது.

அது இம்மாதம் முதல் 8 மணித்தியாலமாக குறைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற உயர் மட்ட கலந்துரையாடலில் பங்கு பற்றி விட்டு திரும்பிய யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் இதற்கான சுற்று நிருபத்தை பெற்று வந்துள்ளார்.

அச்சுற்று நிருபத்திற்கமைய கடந்த 5 ஆம் திகதி முதல் புதிய வேலை நேரம் நடைமுறைக்கு வந்துள்ளது. (ஐ-15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### செல்வி
### கந்தையா பரமேஸ்வரி

[இளைப்பாறிய ஆசிரியை-இளவாலை]

கல்லூரி வீதி, இளவாலையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை செல்வி கந்தையா பரமேஸ்வரி நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா சின்னத்தங்கம் தம்பதிகளின் புத்திரியும், மகேஸ்வரி, சிவபாக்கியம் சிவஞானம் (மலேசியா), கனகசபை (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), சிவயோகம், ஞானேஸ்வரி, புவனேஸ்வரி (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை), ஜெகதீஸ்வரி [அரசினர் வைத்தியசாலை நிந்தாவூர்] ஆகியோரின் அருமைச் சகோதரியும், சண்முகம், சுந்தரம், நவரத்தினம் (மலேசியா), சுசீலா, பெரியதம்பி (வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்), பாலசுப்பிரமணியம் (இலங்கை போக்குவரத்துச் சபை), தர்மரத்தினம் (லங்கா சிமெந்து லிமிட்டெட், தமிழர் புனர்வாழ்வுக் கழகம்), சலீம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 374, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து நாளை 12-3-95 முற்பகல் 10 மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கற் திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கந்தையா கனகசபை
சகோதரன்

374, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். [35624]

### திருமதி கந்தையா தங்கம்மா

காடிவளை இளவாலையை வசிப்பிடமாகவும் தற்பொழுது வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தங்கம்மா 1995 - 03 - 10 இல் காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், அன்னலட்சுமி இராசேந்திரம் ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகலிங்கம், செல்வமணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திரு. திருமதி வரதராஜா - யோகராணி (பிரான்ஸ்), திரு. திருமதி அருந்தவராஜா-மாலதி (ஜேர்மன்), திரு திருமதி யோகராஜா - யோகமதி (பிரான்ஸ்), திரு. திருமதி விஜிதா - பால்ராஜா (பிரான்ஸ்), வனஜா, ஆதிரையன், இசைச்செல்வி, இளஞ்செல்வன், இளங்குமரன், திருச்செல்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பார்த்தனா, பார்த்தனன், மதுசுதன், நிமோஷன், தர்சன், தனுஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (11 - 03 - 1995) இன்று மு. ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நா. அன்னலட்சுமி (மகள்)
க. இராசேந்திரம் (மகன்)

பாதாள வயிரவர் கோவிலடி,
வடலியடைப்பு. (35621)

### கிருஸ்ணபிள்ளை சிறிசச்சிதானந்தம் (சசி)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இளவாலை இறாக்லை வளவை வசிப்பிடமாகவும் கொண்ட கி. சிறீசச்சிதானந்தம் அவர்கள் 9-3-95 திகதியன்று காலமாகிவிட்டார்.

அன்னார் மறீனா றணாவின் (ஆங்கில ஆசிரியை யா/ மாரீசன்கூடல் றோ. க. த. க. பாடசாலை) அன்புக் கணவரும், ஆனந்த், நிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், இளவாலை திரு திருமதி சூ. மனுவேற்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியரும், தற்போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாண தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளரும்) அவர்களின் மருமகனும், செல்வி றெனி அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது தற்போதைய இல்லத்திலிருந்து இன்று (11-3-95) சனிக்கிழமை பி. ப. 2 00 மணியளவில் உடுவில் மல்வம் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மறீனா றணா
[மனைவி]

கற்பக்கனை,
(டச்சுவீதி)
உடுவில் (35622)

### திருமதி பாக்கியம் சின்னத்துரை

நல்லூர், கோவில் வீதி, நல்லலக்ஷ்மி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னத்துரை நேற்று வெள்ளிக்கிழமை (10-03 95) காலை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற டாடர் செல்லப்பா சின்னத்துரை அவர்களின் அருமை மனைவியும், கோணேசலிங்கம், குகமணிதேவன் (காட்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), சத்தியபாமா (மலேசியா), மகாலிங்கம் (வசந்தி தியேட்டர், வவுனியா) மகேந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னலட்சுமி நல்லநாதன், பாலசுப்பிரமணியம் [மலேசியா) அற்புதமலர் (மலர்) சோமாஸ்கந்தன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், மீனாம்பிகை, திலகாம்பிகை (சுவிஸ்), நிர்மலாம்பிகை, பாக்கியலோஜினி [கனடா], சசிகலா [கனடா], நந்தகுமார் [ஜேர்மனி] நளாயினி [நுண்கலைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்], உதயா, உதயகாந்தன், வடிவாம்பிகை [கனடா], பார்த்திபன் (கனடா), பிரியதர்சினி [கனடா) ஆகியோரின் பேர்த்தியாரும், ஸ்ரீசன் [கனடா], சிமந்தா [கனடா], திவ்வியா [கனடா], சுகன்யா [கனடா] ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை [12-03-95] காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கோணேசலிங்கம்
[மகன்]

159/31, நல்லலக்ஷ்மி அவனியு,
கோவில் வீதி,
நல்லூர். [35627]

# பாதுகாப்புச்சபை அங்கத்துவ பதவி வாய்ப்பை நழுவவிட அரசு முடிவு

கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்டக் குழுவான பாதுகாப்பு கவுன்ஸிலில் இடம் பெறக் கிடைக்கும் வாய்ப்பை நழுவி விடுவதற்கு ஸ்ரீலங்கா முடிவு செய்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புக் கவுன்ஸிலில் அடுத்து வெற்றிடமாகவுள்ள தெற்காசிய பிரதிநிதிக்கான இடத்துக்கு தெரிவு செய்யப்படுவதற்கு, சர்வதேச ஆதரவைத் திரட்டும் முயற்சியில் தென்கொரியா முழுமூச்சாக ஈடுபட்டு வரும் அதே வேளை—

அந்த இடத்தைப் பெறும் முயற்சியிலிருந்து பின் வாங்குவதற்கு ஸ்ரீலங்கா முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

''இத்தகைய உயர்மட்ட பதவிகள் படாடோபமானவை. கவுன்ஸிலில் பிரதிநிதித்துவம் பெறுவது உண்மையில் நல்ல விடயமாக இருக்காமல் போகலாம். இந்த விடயத்துக்காக பிரசாரம் செய்வதிலும் பார்க்க ஸ்திரமான பொருளாதார கொள்கைக்காகப் பாடுபடலாம்.''— என்று வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா கடைசியாக 1962 இல் பாதுகாப்புக் கவுன்ஸிலில் பணியாற்றியதாகவும் அவர் சொன்னார்.

இந்தப் பதவியை எட்டுவதற்கான பிரசாரநடவடிக்கையாக தென்கொரிய ஜனாதிபதி கிம் யங் சாம் பலநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார் கடந்த வாரம் செக் குடியரசின் ஆதரவை அவர் பெற்றுக்கொண்டார்.

கடந்த சுமார் ஒரு தசாப்த காலமாக (பத்து வருடங்களாக) — தென்கொரியாவிலிருந்து பெருமளவு நிதிஉதவியைப் பெற்று, தன்னுடைய தொகுதிக்குரிய சில அபிவிருத்தி நிதியங்களுக்கு அதனை செலவிடுவதன்மூலம் பெருமளவு பணத்தை ஐ.தே.க. ஆட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் சூறையாடி வந்ததாகவும் —

இதன் காரணமாக தென்கொரியாவை எதிர்த்து பாதுகாப்புக் கவுன்ஸிலில் பிரதிநிதித்துவம் பெறும் போட்டியில் ஈடுபடுவதை ஸ்ரீலங்காவின் முன்னைய ஆட்சியாளர்கள் தவிர்த்து வந்தனர் என்றும்—

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தென்கொரியாவிலிருந்து கிடைத்த நிதியை முன்னாள் அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் மோசடி செய்தார் என்று குற்றச்சாட்டு முன்னர் கொழும்புப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ)

## விளையாட்டு நிகழ்வு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று காலை 8 30 மணிக்கு ஹாட்லி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ஜ-20)

### சமாதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

திரு. மத்திஸன் தலைமையிலான நோர்வே அரசுக்குழுவில் ஆசிய, லத்தின் அமெரிக்க நாடுகள் பிரிவின் தலைவர் திருமதி ஆஸ்லங் மாரிஹா, நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சைச் (நொராட்) சேர்ந்த பெற்றர் போக் ஆகியோர் இடம்பெறுகின்றனர்

நோர்வே அரசுக்குழு கொழும்பில் நான்கு தினங்கள் தங்கியிருக்கும் அச்சமயம் அமைச்சர்கள் ஜி எல் பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபென்டி ஆகியோரைச் சந்தித்து சமாதான முயற்சி பற்றிய முழு நிலைவரம் பற்றி அறிந்து கொள்வார்கள் என்று திரு மத்திஸன் தெரிவித்தார்

''அமைதி காணும் முயற்சியை பலப்படுத்தும் நல்லெண்ண நடவடிக்கை இதுவாகும் சமாதானம் ஏற்பட்டவுடன் விரிவான அபிவிருத்தி அடிப்படையில் இலங்கைக்கு உதவ நோர்வே தயாராக உள்ளது என்பதையும் நாம் அரசுக்கு தெரியப்படுத்துவோம். சமாதான முயற்சியின் பெறுபேறுகள், மற்றும் நடப்பு நிலைவரம் பற்றி இலங்கையின் அரசியல் மட்டத்தில் நாம் மதிப்பீடு செய்வோம்''- என்றும் அவர் தெரிவித்தார்.

### தொண்டர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்து அங்கு மேற்கொள்ளப்படும் நோர்வேயின் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடும்.

அமைதி நிரந்தரமாக ஏற்பட்டவுடன் இத் திட்டங்களை விரிவுபடுத்துவது பற்றியும் நோர்வே அரசு பரிசீலனை செய்யும் என்றும் திரு மத்திஸன் தெரிவித்தார். (ஐ—எ

### திருத்தம்

நேற்றைய உதயனில் 2 ஆம் பக்கத்தில் வெளியான யாழ் மத்திய கல்லூரி — பரியோவான் கல்லூரி

91 ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டி

என்ற விளம்பரத்தில் - பரியோவான் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளரின் பெயர்

ஜெயா கதிர்காமர்

என்றிருக்க வேண்டும். ஜெபா கதிர்காமர் என்பது பிழையாகும்.

### யாழ். பல்கலைக்கழகம்
### மகாபொல
### கொடுப்பனவு
### 1993/94

[புலமைப் பரிசில் தவணைப்பணம்]

சிரேஷ்ட மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் தவணைப் பணக் கொடுப்பனவு யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்
(சி/744)

## இன்றறக்ட் கழகத்தின் தலைமைத்துவபயிற்சிநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 11

மானிப்பாய் மகளிர் கல்லூரி—இன்றறக்ட் கழகம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து நடத்தும் 3 நாள் 'தலைமைத்துவப் பயிற்சி நெறி' நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது

இரண்டாம் நாளான இன்றைய நிகழ்வில் பொதுத் தொடர்பும் அதன் வழிமுறைகளும்' தலைமைத்துவமும் முகாமைத்திறனும், தலைமைத்துவமும் தீர்மானம் எடுத்தலும், பிரச்சினைகளை அடையாளம் காணலும் தீர்வுக் கான வழிமுறைகளும் 'என்னும் தலைப்புகளில்' கருத்துரைகளும் தனியாள் நிலை ஆய்வு, கலந்துரையாடல் பயிற்சிகள் என்பனவும் இடம்பெறும்.

நாளைய, நிறைவு நாள் நிகழ்வில் மாணவர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும், சுயதொழில் முயற்சிகளும் திட்ட அறிக்கையும், என்னும் தலைப்புகளிலான கருத்துரைகளும்—

பாடசாலையில் தலைமைத்துவத்தினை வளர்ப்பதற்கான வாய்ப்புகள்; 'ஓய்வு நேரமும் சமூகப்பணிகளும்' என்னும் தலைப்பிலான கலந்துரையாடல்களும்— இடம்பெறும்.

நிறைவாக, ஆய்வறிக்கை வழங்கல், சான்றிதழ் வழங்கல் என்பன நடைபெறும். (9–14)

## இன்று

பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய கட்ட நிதிக்கான நாடக விழா இன்று சனிக்கிழமை இரவு 9 மணிக்கு தொற்றாவத்தை அ. மி. த. க. பாடசாலை கலையரங்கில் நடைபெறும்.

இந் நிகழ்வில் 'பூதத்தம்பி' வரலாற்று நாடகம், 'ராஜா தேசிங்கு' சரித்திர நாடகம் என்பன இடம் பெறும். [ஒ-14–155]

## ஒத்திவைப்பு

உடுப்பிட்டி, மார்ச் 11

இன்று நடைபெற ஏற்பாடாகி இருந்த உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது

கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். எஸ். செல்லத்துரையின் மரணத்தைத் தொடர்ந்து, அவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் முகமாகவே போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

### பனை அபி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக அதிகாரிகளும், அரச திணைக்கள அதிகாரிகளும் இக் கூட்டத்தில் பங்குபற்றுவர்.

யாழ். மாவட்டத்தில் பனை அபிவிருத்தி பற்றிய செயல் திட்டங்களையும் அவர் பார்வையிடுவார். [இ-3)

### இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபலமான அரசியல் வாதிகளை தீயசக்திகள் கொலை செய்தமைக்கு இந்த விசேட பிரிவின் மந்தப் போக்கே காரணம் என்றும் அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் மற்றும் இராணுவத்தளபதியின் உறவினர் ஒருவரே இப்பிரிவின் தலைவராக இதுவரை பணியாற்றியதால் இந்தப் பிரிவில் பணியாற்றிய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்ததாகவும்—

தற்போது இந்த முட்டுக்கட்டை நிலை நீக்கப்பட்டிருப்பதால், இந்தப் பிரிவின் செயல் இறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருப்பதாகவும்—

இராணுவப் பேச்சாளர் சொன்னார்.

இராணுவத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் மேலும் பல மாற்றங்கள் இடம் பெறும் என்றும் அவர் சொன்னார். (உ)

## றோட்டரக்ற் நடத்தும் நாடகப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச். 11

யாழ். றோட்டரக்ற் கழகத்தினால் நடத்தப்படும் தமிழ் நாடகப் போட்டி இன்று சனிக்கிழமை, யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும். போட்டியில் 12 பாடசாலைகள் கலந்து கொள்கின்றன. போட்டி காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும். (இ)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 11

மானிப்பாய் மெமோறியல் உயர்தர மாணவர் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடலும், மதிய விருந்து நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு ஒன்றியத் தலைவர் கிருஷ்ணானந்தன் அரவிந்தன் தலைமையில் நடைபெறும். யாழ் கல்வி வலயம் – II இன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம் முதன்மை விருந்தினராகவும், தென்னிந்திய திருச்சபையின் இளைப்பாறிய ஆயர் டி ஜே. அம்பலவாணர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். [இ]

* * *

சாவகச்சேரி, மார்ச் 11

சாவகச்சேரி இந்துக்கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும்.

### தொண்டர் அமைப...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

[எம் எஸ் எப்]

திரு. எஸ். வி. ர. ரூபசிங்க [ஏ டி பி]

★ திரு கே.வி. முதலியார் [ஏ.டி.பி.]

★ திரு. எஸ். நடேசன் ஏ டி பி]

★ செல்வி டி. லக்ஸ் [ஏ.டி.பி]

திரு. பீற்றர் பெரி [உலக தரிசனம்]

★ திரு சஞ்சீவ் விஜயசிங்கா [உலக தரிசனம்)

★ திரு. வில்லியன் டி சில்வா [உலக தரிசனம்]

★ திரு. அன்ரு சுந்தர்சிங் [உலக தரிசனம்]

★ திரு. சந்திரா பெரேரா [உலக தரிசனம்] [ஐ–173]

## வடமத்திய மாகாணசபை கலைக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதிக்கு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

வடமத்திய மாகாண சபையை உடன் கலைத்து தேர்தல் நடத்துமாறு ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள், மாகாணசபை நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவில்லை என்று காரணம் காட்டி இக் கோரிக்கையை விடுத்துள்ளார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

### யாழ் மத்திய கல்லூரி
### உயர்தர மாணவர் மன்றம்
### ஒன்றுகூடல்

மேற்படி ஒன்றுகூடல் நிகழ்வு திட்டமிட்டபடி நாளை **12 - 03 - 1995** ஞாயிற்றுக்கிழமை காலை **10** மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

செயலாளர்,
உயர்தர மாணவர் மன்றம்,
யாழ் மத்திய கல்லூரி.

(சி/745]

### உடுப்பிட்டி
### அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்
### விளையாட்டுப் போட்டி
### ஒத்திவைப்பு

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 25 வருடங்கள் அதிபராக இருந்து அரும்பணியாற்றிய திரு. எஸ. எஸ். செல்லத்துரை அவர்களின் மறைவை ஒட்டி இன்று] சனிக்கிழமை நடைபெற இருந்த விளையாட்டுப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். இதனை அழைக்கப்பட்ட கௌரவ நடுவர்களும், விருந்தினர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ந அனந்தராஜ்
அதிபர்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

[35633]

## இதய அஞ்சலிகள்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிலல் 25 வருட காலம் அதிபராக இருந்து அரும்பணி ஆற்றிய

### உயர்திரு எஸ்.எஸ். செல்லத்துரை

அவர்களின் மறைவிற்கு

எமது இதய அஞ்சலிகள்!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்
மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

[35634]

## மரண அறிவித்தல்கள்

### S. S. செல்லத்துரை

(முன்னை நாள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபர்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் கல்லுவம் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட S. S செல்லத்துரை அவர்கள் நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், Dr. செல்வச்சந்திரன் (லண்டன்), Dr. செல்வராஜன் [லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
S. தம்பியையா
சகோதரன்)

கல்லுவம்,
கரவெட்டி. (35631)

### திருமதி
### இராசேந்திரம் பத்மாவதி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, இல.690 ஐ. சேர்ந்த இராசேந்திரம் பத்மாவதி 9-3-95ல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சோதிட நிபுணர் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபதி, சகுந்தலாதேவி, மற்றும் மீனலோஜினி, அருந்ததி, ரகுபதி (பிரான்ஸ்), வாசுகி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யேசுதாசன் மற்றும் போ.இ. அலக்ஸ்சாண்டர் (பாடகர், கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்), டாக்டர் அமிர்தபூபதி கலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், காஜாயனி, துஸ்யந்தன் (பிரான்ஸ்), துளசிகாந் வாகீசன், சாந்தி பூஷன், இமையகாந்தன், விஜயகாந்தன், செந்தூரன் மீரா, சோபிகா சஞ்சீவ், சகிஸ்னா, துவாரகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11-03-95) சனிக்கிழமை மாலை 4. 00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மீனலோஜினி
[மகள்]

690, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [35630]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 2ந3/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11- 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org